மனோரஞ்சனி

புஸ்தகம் 3. மணி 8.

ஜூன் 1927

1. JL
LL,9(m2u,M;4
M27.3.8.
186449

செந்திலாண்டவன் திருவடி துணை.

# பாலவிநோதினி

அல்லது

# குழந்தைகளின் அன்பன்

---

ஒரு மாதாந்தப் பத்திரிகை


தொகுதி 3 | 1921ஞு ஆகஸ்டுமீ | பகுதி 8


## எண்வகை உண்மை மலர்கள்


186449


అహింసా ప్రథమం పుష్పం పుష్పమింద్రియనిగ్రహః
సర్వభూతదయాపుష్పం క్షమాపుష్పం విశేషతః ।

அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம், புஷ்ப மிந்த்ரியநிக்ரஹ:
ஸர்வபூததயா புஷ்பம், க்ஷமாபுஷ்பம் விசேஷத: |

శాంతిఃపుష్పం తపఃపుష్పం ధ్యానం పుష్పం తథైవచ
స... ష్ణోః ప్రీతికరంభవేత్ ॥

...பம், த்யாநம் புஷ்பம் ததைவச
...விஷ்ணோப்ரீதிகரம்பவேத்॥


3C
186449

## நல்லபிள்ளைகளின் நடவடிக்கை

நல்லபிள்ளைக ளெப்போதும் நல்ல செய்கைகளையே செய்வார்கள்; நல்லவருடன் கூடி அவர்களோடு பழகி விளையாட்வே ஆசைப்படுவார்கள்; தங்கள் தாய்தந்தையரை நேசித்து அவரைப் பெருமைப் படுத்துவார்கள்; தாய் தந்தையர்கள் சொற்கேட்டு நடப்பார்கள். "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை, தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை" என்னும் போதனை இவர்களுக்குண்டு. அவர்கள் தங்கள் தாய் தந்தையர்கள் பேசுவதையும் செய்வதையும் கவனித்து அவற்றிற்குத் தக்கவாறு நடந்து, அவர்களை மகிழ்விப்பார்கள். "தாயிற் சிறந்த கோயிலு மில்லை, தந்தையின்மிக்க, குருவு மில்லை" என்னும் உபதேச மொழிகளை அவர்கள் மறக்கமாட்டார்கள்; தாய்தந்தையர்கள் செய்யாதே என்று விலக்கியவைகளை மறந்துஞ் செய்ய மாட்டார்கள். அவர்கள் செய்யென்று விதித்தவைகளைச் செய்யத் தவறவே மாட்டார்கள். "விதித்தன கொள்ளலும் விலக்கிய வொழித்தலும், மதித்திடு மறமென வகுத்தனர் மேலோர்" என்னுமித்திருவாக்கு அவர்களுடைய நெஞ்சத்தில் ஒரு தனி ஒளியாய் இலகும். அவர்கள் சிலசமயம் தங்கள் தாய் தந்தையரின் விருப்பத்தைக் குறிப்பாலுணர்ந்து செய்து மகிழ்ந்து அவர்களை மகிழ்விப்பார்கள். உலகத்தில் பூவாதே காய்க்கும் மரமுமுண்டு. அதுபோல

சென்னை-600



ஏவாதே செய்யும் பிள்ளைகளும் மக்களுள் விளங்குவார்கள் அன்றியும் "ஏவாமக்கண் மூவாமருந்து" என்னும் நீதிவாக்கு அவர்களைத்திருத்து மல்லவா?

(2) தாய் தந்தையர் தாங்கள் விரும்பியதைக் கொடுக்க மறுப்பினும், தாங்கள் விரும்பிய செய்கைகளைச் செய்யவொட்டாமல் தடுப்பினும் அவர்கள் அவைகட்காக அவர்களிடம் வருத்தங்கொள்ள மாட்டார்கள்; முணுமுணுக்க மாட்டார்கள்; அழுது பிடிவாதஞ் செய்ய மாட்டார்கள். தாய்தந்தையர்கள் தங்களைவிட வயதிலும் அநுபவத்திலும் அறிவிலும் பெரியவர்களென்பதும், அவர்கள் தங்களுடைய நன்மையையே தேடுகிறவர்களென்பதும், தங்களுக்கு வேண்டியதும் வேண்டாததும் தெரிந்து செய்பவர்களென்பதும் அவர்களுக்குத் தெரியும். ஆகையால் இவற்றையெண்ணி இட்டதையுண்டு இடாததை மறந்து மகிழ்ச்சியோ டிருப்பார்கள்; அவர்களை எப்பொழுதும் மனத்தி லெண்ணிப் பணிவார்கள். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" அல்லவா?

186449

(3) அவர்கள் தங்கள் உபாத்தியாயர்களுக்கு அடங்கி நடப்பார்கள். * "அடக்க மமரருளுய்க்கும் அடங்காமை ஆரிருளுய்த்துவிடும்"—என்னும் வேதவாக்கியம் அவர்களைக் கர்வங்கொள்ளவொட்டாமல் தடுக்கும். உபாத்தியாயர்கள் சொல்வதை அமைதியோ டிருந்து அதாவது சித்திரப்பாவையோ லிருந்து காதை வாயாகக்கொண்டு கேட்டு, மனதை இடமாகக்கொண்டு அதில்

* அடக்கமானது ஒருவனைத் தேவருலகத்திற்செலுத்தும்; அடங்காமையானது நரகத்தில் தள்ளும்.

கேட்டவைகளை விடாமல் பதியவைத்துக் கொள்வார்கள்.

* "ஆசானுரைத்த தமைவரக் கொளினும்
காற்கூ றல்லது பற்றல னாகும்"

என்று நன்னூல் கூறியிருக்கிறபடியினால் அவர்கள் உபாத்தியாயர் சொல்வதைப்பராக்காகக் கேட்கவேமாட்டார்கள். உபாத்தியாயரைத் தெய்வமாக எண்ணி வழிபடுவார்கள். "எழுத்தறி வித்தவ னிறைவனாகும்" என்பது உபதேசமல்லவா? நல்லதை யெடுத்துச் சொல்லுகிறவர்களைக் கண்டால் அவர்களிடம் அன்புபாராட்டி வருவார்கள். அப்படிப்பட்டவர்களிட மிருந்து புதிது புதிதாக ஏதாவது தெரிந்துகொள்ள முயல்வார்கள்; பிறர் சொல்வதொன்றை நன்றாய் ஆராய்ந்து பார்த்து அதனுண்மைப்பொருளை யுணர்வார்கள். †"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்று வேதங் கூறுகிற தல்லவா? ஓய்வு நேரம்போக மற்ற நேரங்களில் தம்மோடு பயிலும் மாணவர்களோடு சேர்ந்து, தம் உபாத்தியாயரிடத்திற் கேட்டவைகளைப் படிப்பதிலும் ஐயந்தீர ஒருவர்க் கொருவர் கேள்விகள் கேட்டுப் பொருளுணர்வதிலும் காலத்தைக் கழித்துத் தங்களுக்குள் ளிருக்கும் அறியாமையை ஒழிப்பதிலேயே விருப்ப முடையவர்களா யிருப்பார்கள்.

---

* ஆசிரியர் கற்பித்தவைகளை நன்றாய்க் கற்றபோதிலும் அவர் கற்பித்தவைகளில் கால்பங்கே மனத்திற் பதியுமல்லது அதற்கதிகமாகப் பெறுதவனாவான்.

† யாதொரு பொருளை யாவர் யாவர் சொல்லக் கேட்பினும் அப்பொருளின் மெய்யாயபயனைக் காணவல்லதே அறிவாம்.



டியிருந்தால் அதன் சொந்தக்காரர்களைக் கண்டு பணிவாய்க்கேட்டு உத்தரவு பெற்றுக்கொண்டு பிறகு அதைப் பெறுவார்கள். அவர்கள் ஒருவருடைய தோட்டத்திலும் உத்தரவில்லாமல் நுழையமாட்டார்கள். சிலசமயம் நுழையும்படியா யிருந்தால் ஸர்வஜாக்ரதையாய் அங்கிருப்பதொன்றையும் தொடாமற் போய் வருவார்கள்; புஷ்பத் தோட்டங்களிலே போனால் செடிகளைப் பிடித்திழுக்க வாவது புஷ்பத்தைப்பறிக்கவாவது துணியமாட்டார்கள்.

(6) நல்லபிள்ளைகள் பொய்யைக் கனவிலும் நினையார்கள். பொய்பேசுவோர் பக்கத்திலும் நில்லார்கள். பொய் ஒருவனைப் பல்வித துன்பத்திற் குள்ளாக்குமென்பதை அவர்கள் அடிக்கடி சிந்தித்துக்கொண்டு உண்மை வழியிலே நடப்பார்கள். பொய்பேசிப் புகழ் பெறுவதா யிருந்தாலும் அதனைப் பெரிதாக நினைக்கமாட்டார்கள். மெய்பேசி இகழ்ச்சி நேரிடுவதா யிருந்தாலும் அதனைக் கைவிடமாட்டார்கள். ஏனெனில் "உண்மை கடைப்பிடி" என்று உபதேச மிருக்கிறதல்லவா? அன்றியும்—

"முனிக்காசு தந்து முதிர்கானஞ் சென்று
மனைக்காசை மைந்தனை மாறி—வினைப்பறையன்
ஆனான்மெய் காக்க அரிச்சந் திரனென்றால்
ஏனோபொய் பேச விழுக்கு" என்று

அரிச்சந்திரன் சரித்திரத்தை நினைப்பூட்டும் செய்யுள் அவர்களுள்ளத்தில் தோன்றும். அதனால் அவர்கள்,

---

பனித்துளியானது எப்படி அறுகம்புல்லின் நுனியில் ஒட்டிக்கொண் டிருக்கிறதோ அப்படியே நமது வாழ்நாளையும் நாம் காலத்தை யொட்டி நடத்தவேண்டும்.

உண்மை யுடைமையே யுடைமை என்பதை உணர் வார்கள்.

(7) நல்லபிள்ளைகள் தவறு செய்ய அஞ்சுவார்கள். தவறு ஒன்று தவறிச் செய்யின் அதனை ஒப்புக்கொள் வார்கள்; தாம் தவறு செய்ததற்காக வருந்துவார்கள். பிறகு ஒருபோதும் அவ்வாறு நேராதிருக்க முயலுவார் கள். "தவறொன்றுசெய்யின் தண்டனையோன் றுண் டாம்" "தவறில்லையாயின் தண்டனையுமில்லை" என்று வழங்கும் மூதுரைகள் அவர்களைச் சீர்படுத்தும்.

நல்ல பிள்ளைகள் நாடோறும் படுத்துக் கொள் ளும்போது தாங்கள் அன்றுமுழுதுஞ் செய்த செய் கைகளைச் சிந்தித்துப்பார்த்து நல்லது செய்திருப் பின் சந்தோஷப்படுவார்கள். தீயது செய்திருப்பின் வருந்துவார்கள். அதிலிருந்து திருந்தவேண்டுமென்று தீர்மானித்துக்கொள்வார்கள்; நல்ல வழியிலே செல்லும் படியான அநுக்ரஹமுண்டாகவேண்டுமென்று ஈசுவரனை வேண்டிக்கொள்வார்கள்.

* "தனக்கு வமையில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது"

என்று வேதம் கூறியிருக்கிறபடியினால் அவர்களுக்குக் கடவுளிடத்தி லன்புகொண்டு அவனை நம்பி நடக்க வேண்டுமென்கிற எண்ணம் அடிக்கடி உண்டாகும். அவர்கள் தாங்கள் படித்தவைகளை மறுபடியும் சிந்த னைக்குக் கொண்டுவருவார்கள். படித்தவற்றை மறுபடி

* ஒருவாற்றாலும் தனக்கு நிகரில்லாதவனாகிய கடவுளின் திருவடியைச் சேர்ந்தவர்க்கல்லது மற்றவர்க்கு மனத்திலுண் டாகும் கவலையை நீக்குவதரிது.



சிந்திப்பது கல்வி பயில்வதற்குரிய முறைகளிலே ஒன் றல்லவா?

(8) நல்லபிள்ளைகள் காலந்தவறாமல் பள்ளிக்கூடத் துக்குப்போய் வருவார்கள். அவர்கள் பள்ளிக்கூடத்திற் குப்போகும் வழியில் ஆடுவதும் சண்டைபோடுவதும் தீங்கென்று உணர்ந்தவர்களாகையினால் ஒழுங்காய்ப் போய் வருவார்கள். அவர்களுக்கு ஒருவருந்தீங்கு செய்யமாட்டார்கள். அவர்களிடம் ஒழுக்க மிருக்கிற தல்லவா? நன்மை, நன்மையையும், தீமை, தீமையையும் விளைக்குமென்பது திண்ணமன்றோ? பள்ளிக்கூடத்தில் உபாத்தியாருக்குக்கீழ்ப்படிந்து நடந்து அவரை மகிழ் வித்து நல்லவர்களென்றும் கெட்டிக்காரர்களென்றும் பேர்பெற முயலுவார்கள். பள்ளிக்கூடம் விட்டதும் கூச்சல் போடுவதும் சீட்டியடிப்பதுமாக ஓடும் துஷ்டப் பயன்களோடு சேரவே மாட்டார்கள். வழியில் எந்தக் காரணத்தை முன்னிட்டுந் தாமதிக்கமாட்டார்கள். கா லில் கல்லையாவது மற்றும் எதையாவது தள்ளிக் கொண்டு பராக்காய்ப்போகமாட்டார்கள். ஓர் ஓரமாய்க் கீழே பார்த்துக்கொண்டு நடந்து செல்வார்கள்; வீட்டுக் கு நேரத்திலேயே வந்து, மறுநாள் படிக்க வேண்டிய பாடத்தைக் கவனித்துப் படிப்பார்கள். தங்களுக்குத்

கெட்ட எண்ணங்களுக்கும்பொறாமைக்கும் ஒருபோதும் இடங் கொடாதேயுங்கள். ஒரு முறை இடங்கொடுத்துவிட் டால் அவை ஜனசஞ்சாரமற்ற காட்டில் முட்செடிவளர்வது போல் வளர்ந்து கொண்டேவந்து கடைசியில் பெரியகேட்டை விளைவிக்கும்.

ந்திரகாசன் வசனம்—சுப்ரமண்யபாரதி இயற்றியது 0-3-0

தெரியாதவைகளைப் பிறரிடங் கேட்டுத்தெரிந்து கொள் வார்கள். அப்படிக் கேட்டுத் தெரிந்து கொள்ள வெட் கப்படமாட்டார்கள்.

(9) சில மூடர்களைப் போல நகத்தைக் கடித்துத் தின்பதும் வாயில் விரலை வைத்துக் கொண்டு சூப்புவதும் அவர்கள் செய்யமாட்டார்கள். அப்படிச் செய்யும் அறிவீனர்களைக் கண்டால் அருவருப்பார்கள். ஒழு ஈனமென்று பெரியோர்கள் சொல்லுகிறவைகளைச் செய்யவே மாட்டார்கள். "ஒழுக்கம் விழுப்பந்தரும்" என்பது அவர்களுக்குத் தெரியும்.

(10) அவர்கள் கடவுளை வணங்கவும் வாழ்த்தவும் பிரியப்படுவார்கள். 'கடவுளை நம்பினோர் கைவிடப் படார்" என்னும் போதனையை மறக்கமாட்டார்கள். கடவுளைத் துதிப்பதற்கும் பிறர் துதித்தால் அதனைக் கேட்பதற்கும் விரும்புவார்கள். அவரை அடிக்க சிந்திப்பார்கள். ஆபத்திலும் சம்பத்திலும் அவரையே துணைக்கொள்வார்கள்.—

"சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை—உபாயம்
இதுவே மதியாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்"

என்று கூறும் உபதேசம் அவர்க்கு முன்னின்று துணை புரியும்.

நல்லபிள்ளைகளை எல்லோரும் மதித்து வேண்டுவ உதவுவார்கள். அவர்களுக்குப் பகைவர்களே இருக் மாட்டார்கள். அவர்கள் அதிகாலையிலெழுந்து கடவுளைத் தொழுது எப்போதும் ஸந்தோஷமாயிருப்பார்கள். கடவுளும் அவர்களிடத்திற் கருணை கொள்வார்.

# அர்ஜுனனுக்கு அநுமான் துவஜமான விவரம்.

சீரும் செல்வமுஞ் செருக்கினா லழியும்.

(ஆனந்த ராமாயணம்.)

ஒரு சமயத்தில் அர்ஜுனன் கிருஷ்ணனின்றித் தேரின்மீதேறிக் கொண்டு தென்றிசையிலுள்ள ஒரு பெரிய காட்டில் வேட்டைக்காகச் சென்றான். தான் ஒருவனாகத் தேரைச்செலுத்திக்கொண்டு பாணங்களால் விலங்குகளை அடித்துக்கொண்டே இராமேசுவரப் சென்றுவிட்டான்; அங்கு சேதுவில் ஸ்நானஞ்செய்து நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு மறுபடி தேரின் மீதேறி அந்தக்கடற்கரையில் கொஞ்சம் கருவத்துடன் சஞ்சரித்தான். இச்சமயத்தில் அரண்யத்தில் பர்வதத்தின்மேல் சாமானியக்குரங்குபோல் வேடம்பூண்டு ராம ராமா என்று ஜபம் செய்துகொண்டு பிங்கள வர்ணமுள்ள உரோமங்களுடன் உட்கார்ந்திருந்த மங்களசொரூபனாகிய அநுமானைக்கண்டு அர்ஜுனன் "ஏ குரங்கே உன் பெயர் என்ன?" என்று வினவினான்.

இவ்விதம் அர்ஜுனன் கேட்டதும் அநுமான், மந்தஹாஸம் செய்து "ஸ்ரீராமச்சந்திர பிரபு நூறுயோசனை தூரம் சமுத்திரத்தில் கற்களால் அணைகட்டியது எவனுடைய பிரதாபத்தாலோ அவன்தான் நான். என் பெயர் அநுமான். வாயுவின் குமாரன்" என்று பதிற் றினான். இப்படிக் கருவத்துடன் கூறின வார்த்தையைக் கேட்ட அர்ஜுனன் தானும் கருவத்துடன் சிரித்து முன்னால் நிற்கும் அநுமானை நோக்கி, "முன்

இராமன் கடலில் பலருதவிகொண்டு அணை கட்டியதேன்? தன்பாணங்களாலேயே ஒருவர் உதவியுமின்றி அணைகட்டி யிருக்கலாமே" என, அநுமான், "அர்ஜுனா! என்னைப்போன்ற கபிகளின் பாரத்தினால் சரஸேதுவானது சமுத்திரத்தில் அமிழ்ந்து விடுமென்றெண்ணி இரகுநந்தனன் அங்ஙனம் அணைகட்டவில்லை' என்றான். அர்ஜுனன் அநுமான் கூறியதைக் கேட்டு "வானரசிரேஷ்டனே! குரங்குகளின்பாரத்தினால் சரஸேது சமுத்திரத்தில் அமிழ்ந்துபோவதானால் வில்லாளியின் வில்வித்தைக்கு மகிமை என்னவிருக்கிறது? நான் உனக்கு முன்னால் இப்போது சரஸேதுவைக் கட்டுகிறேன்; நீ அதன்மேல் நர்த்தனம் முதலியவற்றை உன்னிஷ்டம்போல் செய்; பிறகு என் வில்வித்தையைப்பார்" என்றுரைத்தான். அநுமான் புன்னகைகொண்டு "அர்ஜுனா! என்கால் கட்டைவிரல் பட்டவுடன் நீ கட்டும் சரஸேது சமுத்திரத்தில் முழுகிவிட்டால், நீ என்ன செய்கிறாய்" சொல்லென்றான்.

அர்ஜுனன்! "ஆஞ்சனேய! உன்பாரத்தினால் என் சரஸேது ஜலத்தில் முழுகிவிட்டால், நான் இவ்விடமே அக்கினிப்பிரவேசம் செய்து விடுகிறேன். இது சத்தியம், முழுகச் செய்யாவிடில் நீ என்னசெய்கிறாய்? உன் பந்தயத்தைத் தெரிவி" என்றான்.

அநுமான் அர்ஜுனன் செய்த பிரதிஞ்ஞையைக்

---

ஒரு போதும் அதைரியம் கொள்ளாதேயுங்கள். அதைரியங் கொண்டால் ஒரு காரியமும் ஆகாது. அதைரியமே அபிவிருத்தியின் சத்துரு. அதைரியத்தை அறவே ஒழித்தாலொழிய ஒருவர் விருத்தியடைய முடியாது.



கேட்டு, "அர்ஜுனா! உன் சரஸேதுவை நான் என்கால் கட்டைவிரலால் சமுத்திரத்தில் முழுகும்படி செய்யாவிடில் உன்னுடைய இரதத்தின் துவஜத்திலிருந்து உனக்கு ஊழியஞ் செய்கிறேன்" என்றான். அர்ஜுனன் "சரி அவ்விதமே யாகட்டும்" என்றுரைத்து, மஹத்தானவில்லை எடுத்து டண! என்றோசைபடச்செய்து பாணங்களைப் பிரயோகித்து, நெருக்கமாகவும் உயரமாகவும் ஒரு ஸேதுவைக் கட்டினான்.

அநுமான் உடனே சமுத்திரத்திற்கு மேல் நூறு யோஜனைதூரம் உள்ள சரஸேதுவைப்பார்த்து வியந்து அர்ஜுனன் கண் முன்பாகவே ஒரு கணநேரத்தில் தன் கால் கட்டை விரலால் அழுத்தி அதைக் கடலில் முழுகும்படி செய்தான். அப்பொழுது தேவர்கள், கந்தருவர்கள், கின்னரர்கள், உரகர்கள், அரக்கர்கள், வித்தியாதரர்கள், அப்ஸரஸ்திரீகள், ஸித்தர்கள் எல்லோரும் ஆகாயமார்க்கத்திலிருந்து புஷ்பமாரி பொழிந்தார்கள். அர்ஜுனன் இதைப்பார்த்து சமுத்திரக்கரையில் சிதையை அடுக்கித்தேகத்தை விட நிச்சயம் செய்தான். அநுமான் வேண்டாமென்று தடுத்தும் கேட்கவில்லை. இந்தச்சமயத்தில் கிருஷ்ணபகவான் அர்ஜுனனுக்கும் அநுமானுக்கும் நடந்த வரலாறு தெரிந்துகொண்டு

---

சோம்பல் நம்மைக் கெடுப்பது. சுறுசுறுப்பும் முயற்சியும் நம் முன்னேற்றத்திற்கு முக்கிய சாதனங்கள். யார் சோம்பலை விட்டுச் சுறுசுறுப்பையும் முயற்சியையும் கைக்கொள்கிறார்களோ அவர்களே முன்னேற்ற மடைவார்கள். "முயற்சி திருவினையாக்கும்; முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்" [குறள்]. "சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்" (கொன்றை வேந்தன்)

பிரம்மசாரிவேடத்துடன் அவர்களின் எதிரேதோன்றி ''நீங்களிருவரும் முன்செய்த காரியம் யாவும் வீண். சாட்சியின்றிச் செய்யும் காரியம் பொய்யென்றும் உண்மை என்றும் தெரியவாராது. நீங்களிருவரும் இப்போது முன்போல் செய்தால் நான் பார்வையிட்டு உண்மை பொய் என்பதைத் தெரிந்து சொல்லுகிறேன்'' என்றான். அர்ஜுனன், அநுமான் இருவரும் பிரம்மசாரியின் சொல்லைக்கேட்டு ''சரி அவ்விதமே செய்வோம்'' என்று சம்மதித்தனர்.

பிறகு அர்ஜுனன் காண்டீவம் என்ற தநுசால் முன்போல் சரஸேதுவைக் கட்டினான். அந்தஸேதுவுக்கு மத்தியில் கிருஷ்ணன் தமது சக்ராயுதத்தை வைத்தார். பிறகு ஆஞ்சநேயன் தனதுகாற்பெருவிரலால் அச்சேதுவை அழுத்தினான். சேது அசையவில்லை. அது கண்டு பாதங்கள் முழங்கால்கள் கைகள் இவைகளைக் கொண்டு தமது முழுபலத்தாலும் அழுத்தினான். அப்படியும் அந்தஸேது அசையவில்லை. அப்பொழுது வானரோத்தமன் ஒன்றும் பேசாமல் ''முன் பெருவிரலால் அழுத்தியதும் சமுத்திரத்தில் முழுகின ஸேது, இப்பொழுது கைகால்களால் உதைத்தும் அசையவில்லை. இதற்குக்காரணம் இந்தப் பிரம்மசாரியல்ல: ஸ்ரீமன் நாராயணன்றான். நான் கருவமடைந்தமையால் அற்புதமானசெய்கையையுடைய ஸ்ரீகிருஷ்ணன் அதைப்பரி

---

எப்போதும் உங்களாலான உதவியைப் பிறருக்குச் செய்து சந்தோஷ மடையுங்கள். கடவுள் உங்களிடம் மகிழ்ந்து உங்களுக்கு வேண்டியவைகளைச் செய்வார். ''ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்'' என்பது முதுமொழியல்லவா?



ஹாரம் செய்யவந்திருக்கிறார். கிருஷ்ணனுக்கு முன்னிலையில் குரங்கின் பராக்கிரமமெங்கே?'' என்றெண்ணி அர்ஜுனனைநோக்கிக் கூறுகிறார்—''ஏ அர்ஜுனா நீ வென்றாய், அது இந்தப் பிரம்மசாரியின் உதவியாலேயே. இவர் பிரம்மசாரியல்ல, ஸேதுவில் சக்கிரத்தைப் பிரவேசிக்கச்செய்த கிருஷ்ணன். உன் உதவிக்காக வந்தவரென்று நானறிந்தேன். இது உண்மை. இவர் திரேதாயுகத்தில் இராமராக இருக்கும்போது எனக்கு துவாபரயுகத்தில் கிருஷ்ணவேஷத்துடன் தரிசனம் கொடுப்பதாக வாக்களித்தார். அந்தச் சொல்லை உண்மையாக்குவதற்கு, உன் ஸேதுவைக் காரணமாகக் கொண்டு வந்திருக்கிறார்'' என்றான். இப்படி அநுமான் பேசிக்கொண்டிருக்கும்போதே பகவான் பிரம்மசாரிவேஷத்தைவிட்டுக் கிருஷ்ணரூபத்துடன் தரிசனம் கொடுத்தார். ஆஞ்சநேயன் பீதாம்பரதரனும் நீலமேகவர்ணனுமாகிய கிருஷ்ணனைப்பார்த்து புளகாங்கிதமுற்று, வணங்கினான். பகவான் அநுமானை ஆலிங்கனம் செய்து கொண்டார். அநுமான் தன்னை பாக்யவானாய்க்கருதி ஸந்தோஷித்தான். பின்பு ஸ்ரீகிருஷ்ணனுடைய உத்தரவின்படி சக்கரம் தன் இருப்பிடம் சென்றது. சமுத்திரத்தின் அலைகளால் சரஸேதுவுங் கலைந்து போய்விட்டது. அப்போது அர்ஜுனனும் ''ஸ்ரீகிருஷ்ணனால் நாம் பிழைத்தோம், இல்லாவிட்டால் இன்று இவனிடம் தோல்வியடைந்து மடிந்திருக்கவேண்டும். வீண்கர்வங்கூடாது'' என்றெண்ணிக் கர்வமடங்கினான். கிருஷ்ணன் அப்போது அர்ஜுனனைப்பார்த்து ''நீ இராமரைத்தூஷித்தாய், அதனால் அநுமான்

உன் வில்வித்தையைப் பொய்யாக்கினான்" என்றுகூறி அநுமானைநோக்கி "ஏ ஆஞ்சநேய! நீ 'எவன் பிரதாபத்தால் ஸ்ரீராமர் கடலில் அணைகட்டினாரோ' என்று இராமரைத்தாழ்த்திப் பேசியதால் அர்ஜுனனால் ஜயிக்கப்பட்டாய். இனி கருவமில்லாமல் எப்போதும் என்னை பஜனம்செய்" என்று மாருதிக்குச்சொல்லி அர்ஜுனனுடன் அவன் பட்டணம்சென்றார். ஆகையால் அர்ஜுனன் அநுமத் துவஜமுடையவனானானென்று எல்லோரும் கூறுகிறார்கள்.

---

நீங்கள் ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டிய வேலையைச் செய்யத் தவறாதீர்கள்—செய்யும் வேலையை ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் செய்யுங்கள். அப்போதுதான் செய்யும் வேலை இனிது முடிவுபெறும்—செய்த வேலையை எண்ணிப்பார்த்து ஸந்தோஷ மடையுங்கள். நீங்கள் செய்யும் வேலை உங்களுக்கு எப்போதும் ஸந்தோஷத்தைக் கொடுக்கும். திருந்தச்செயயும் வேலையே ஒவ்வொரு காரியத்தின் முடிவிற்கும் ஆதாரம். ஆகையால் வேலை செய்யப் பின் வாங்குவது கூடாது—ஒவ்வொருவரும் வேலைசெய்தே தீரவேண்டும். வேலை செய்துகொண்டே வருவதினால் எப்படி ஒரு யந்திரம் துருப்பு முதலியனபிடிக்காமல் சுலபமாக நடக்கின்றதோ அதே மாதிரி நம் சரீரத்திலுள்ள அவையவங்களும் கெட்டுப் போகாமல் அதனதன் ஸ்தானத்திலிருந்து சரிவர வேலைசெய்யும்—வியாதி முதலியன அணுகா—வேலை செய்யாவிடில்—எப்படி ஒரு யந்திரம் வேலைசெய்யாமல் வைக்கப்பட்டால் துருப்புப்பிடித்து மறுபடியும் வேலைக் குதவியில்லாமற் போகிறதோ அப்படியே நமது தேகத்திலுள்ள உறுப்புக்களும் கெட்டு வியாதிக் கிருப்பிடமாகும். ஆகையால் உழைக்கப் பின் வாங்காதேயுங்கள். உழைப்பின் பங்கே ஊதியம்தந்தும்"

திருச்சினாப்பள்ளி ஜில்லா, திருவளர்சோலை போஸ்டு உத்தமசேரி போர்டுபாடசாலை, தலைமை உபாத்தியாயர் ஸ்ரீமான் பி. பரிமணப்பல்லவராயர் எழுதுகிறார்:—

பாலர் தங்களைப் பயிற்றிடும் பண்பீர்!
சாலச் சிறந்த ஜனங்களாய்ச் செய்...
பாலபோ தகரே! மூலவா...
வேலைசூழ் ஞால மிசைவ... ...வரும்
விலங்கொடு மக்க ளெ... ...ன்வே
துலங்கிடா வாறு துலக்... ...யீர்!
மாணவர் தங்கள் மதிவள... ...வு
மாண விளங்க மாநற் கதைக...
தம்மையோர் கருவியாத் தாமனு சரிக்...
அம்ம! உபாத்தி யாயர்காள்! மற்றுமச்
சிறுவர்கள் தாமும் சீர்மையுற் றொளிரவும்
உறுதி கொண்டிவ் வுலகத்தை நல்ல
வழியிற் செலுத்தவும் வல்லமை யேற்கவும்
பழமது நழுவிப் பாலில் விழுந்ததென்
றியம்ப நலந்தரு மியற்பெருங் கதைகளைப்
"பாலவி நோதினி" யெனும்பத் திரிகையில்
வாலறி வாளனால் வாலறி வுறும் வர
கவிதிரு சுப்ர மண்யபா ரதியவர்
கவினுறச் சிறுசிறு நவநவ முறைகளில்
இணைத்தினி தியற்றி ஈய அவற்றைக்
குணத்தொடு குலவும் கூரிய பொருள்தர
ஒவ்வொரு வருங்கற் றுயர்வினை யடையச்
செவ்விய வாசக சாலைகள் தம்மொடு
புத்தக சாலைகள் ஒத்தவீ டுகள்தொறும்
தவழநாம் செய்தாற் றானே தாணியைத்
தகையுறச் செய்தவ ராவோந் தன்யரே.

பி. பரிமணப்பல்லவராயர்.

186449
சென்னை-600 008



நாயின் குணம்

போாசை அற்பம் பெறினும் பெருமகிழ்ச்சி
போாத வீரம், பிரபுபக்தி,—சோராமை
உற்றதுயில் வல்லே உணர்ந்தெழுகை, நாய்னிடங்
கற்கத் தகும்குணங்கள் காண்,

சாணக்கிய நீதி,

## தந்திரத்தால் உண்மை வெளியிட்ட நீதிபதி

ஓர் ஊரில் கல்விமான் ஒருவன் இருந்தான். அந்தக் கல்விமானுக்கு வெகுநாள் வரையில் சந்ததியில்லாம லிருந்தது. புத்திரப்பே றில்லாமைக்கு அவன் மிகவும் வருந்தி க்ஷேத்திர யாத்திரை செய்து கொண்டு இராமேசுவரம் போக நினைத்துப் புறப்பட்டான். அவன் புறப்படும்பொழுது அவன் கையிருப்பி லிருந்த ரொக்க ரூபா ஆயிரத்தையும் அவ்வூரில் நம்பிக்கையுள்ள ஒரு வர்த்தகனிடம் கொடுத்துத் தான் க்ஷேத்திர யாத்திரை செய்துகொண்டு இராமேசுவரம் போவதாயும், போய்த் திரும்பி வரும்வரையில் அந்த ரூபா ஆயிரத்தையும் பாதுகாத்திருந்து பின் கொடுக்கும்படிக்கும் சொல்லி வர்த்தகனை வேண்டிக்கொண்டான். அவ்வர்த்தகன் கல்விமானிடம் மன மிரங்கி அப்படியே பத்திரப்படுத்தி வைத்திருந்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டு வாக்களித்து அந்த ரூபா ஆயிரத்தையும் பெற்றுக்கொண்டான். பின் கல்விமான் க்ஷேத்திர யாத்திரை செய்துகொண்டு இராமேசுவரம் போய் இரண்டு மாதத்திற்குள் திரும்பித் தன்னூர் வந்து சேர்ந்தான். வந்ததும் தான் நம்பிக் கொடுத்துவிட்டுப் போன ரூபாவை அவ்வர்த்தகனைக் கேட்டான். வர்த்தகன் பணத்தாசைகொண்டு "ஆசை வெட்கமறியாது" என்பதற்கேற்ப நம்பிக்கைத் துரோகஞ் செய்யத் துணிந்து கல்விமானைப் பார்த்து "நீ யார் உன்னிடத்தில் ரூபா யார் வாங்கினது? எங்கே கொடுத்து ஏமாந்து

இங்கே வந்து இழவு எடுக்கிறாய் போ" என்று மறுத்துப் பேசினான். இதன்பேரில் அந்தக்கல்விமானுக்கும் வர்த்தகனுக்கும் பெரிய வாக்குவாதம் உண்டாகித் தெருவில் நின்று இருவரும் கூச்சலிட ஆரம்பித்தார்கள். அதைக் கண்ட அவ்வூர் ஜனங்கள் எல்லாரும் வந்து அவ்விடத்திற்கூடினார்கள். வந்தஜனங்கள் கல்விமானைப் பார்த்து, "சீ! நீ ஒரு மனிதனா! பித்தம் பிடித்தவன் போல் பேசுகிறாய். இந்த வர்த்தகன் உன்னுடைய சொற்பத்தொகை ரூபா ஆயிரத்துக்குப் பொய்பேசுகிற மனிதனா? இவ்வர்த்தகனுக்கு உன் ரூபா ஆயிரத்தைப் போல் எவ்வளவோ ஆயிர ரூபாயிருக்கிறது. கொஞ்சமேனும் வெட்கமில்லாமல் துர்வழக்கிடப் பார்க்கிறாய். இது யார்செய்கிறவேலை. கற்றறியாத சிற்றறிவுடையவனும் இம்மார்க்கத்தில் பிரவேசிபானோ! இதைப்பற்றி நியாயஸ்தலத்தில் நீ வழக்கிடுவையாகில் நீதிபதியால் பொய்ப் பிராது செய்த குற்றஞ்சாட்டப்பட்டு நன்றாய்த் தண்டிக்கப்படுவாய்; வாய் பேசாமல் போ" என்று வர்த்தகன் தங்களிடத்தில் இதுவரையிலிருந்து வந்த நம்பிக்கையின் நிமித்தம் பேசினார்கள்.

பின்பு அக்கல்விமான் அவர்களைத் தடுத்துப்பேசவகை தோன்றாதவனாகி நியாயஸ்தலத்தில் அதைக் குறித்து வழக்கிட்டான்! நியாயாதிபதி கல்விமான் தொடுத்த வழக்கையெடுத்துக்கொண்டு அவனைத் தனியே யழைத்து நானோர் உபாயஞ்செய்து உன் ரூபாவை வாங்கித் தருகிறேன், அதற்கு நீ நான்சொல்லுகிற மாதிரி மூன்றுநாள் வரையில் நடக்கவேண்டும். என்னவென்றால் நீ மூன்றுநாள் வரைக்கும் ஒரு வார்த்



தையும் பேசாமல் இவ்வர்த்தகன் கடைக்கருகில் போய் உட்கார்ந்துகொண்டிரு. நான் அவ்வழியே நாலாம் நாள் குதிரை சவாரிசெய்துகொண்டு வருகிறேன் நான்வரும்போது உன்னைக்கண்டதும் முன் சலாம் செய்கிறேன். பின் நீ மறுசலாம் எனக்குச் செய்து நான் அவ்விடம் விட்டுப் போனதும் வர்த்தகனைக் கண்டு உன்ரூபாவைக் கேள். அவன் அதற்கு அப்பொழுது என்ன சொல்கிறானென்பதைக் கேட்டு எனக்குத்தெரியப்படுத்து" என்று சொல்லி வைத்தார். கல்விமான் நியாயாதிபதியினுடைய உத்தரவின்படியே மறுநாளுதயத்திற்கெல்லாம் அந்த வியாபாரிக்கடைக்கருகிற்போய் வாய்பேசாமல் உட்கார்ந்திருந்தான். பிறகு நாலாம்நாள் நியாயாதிபதி தாம் சொல்லிவைத்தபடியே குதிரையேறிக்கொண்டு அவ்வழியே போனார். போகும்போது கல்விமானைக் கண்டதும் தம் குதிரையை நிறுத்தி அவனுக்கு ஒரு சலாம் செய்தார். பின் கல்விமானும் மறுசலாம் செய்தான். உடனே நியாயாதிபதி கல்விமானைப் பார்த்து, "அப்பா! சகோதரனே நீ ஏன் முன்மாதிரி யென்னிடத்திற்கு வருவதேயில்லை. உன்னைப் பற்றி ஒரு சமாசாரமும் தெரியவில்லையே" என்று கேட்டார். அதற்குக் கல்விமான் பதிற்பேசாமல் தலையை யசைத்துக்கொண்டு நின்றான். பின் நியாயாதிபதி போய்விட்டார். வர்த்தகன் இதையெல்லாம் பார்த்து, "ஐயோ! நியாயாதிபதிக்கு இந்த மனிதன் உறவுபோல் காண்கிறதே! இவனை வஞ்சிக்கத் துணிந்தோமே! மகாமோசமல்லவோ போனோம்" என்று திகிலடைந்து, கல்விமானைப் பார்த்து "நீ என் வசத்திற் பணங்கொடுக்கும்போது", நானெந்த விடத்

திலிருந்தேன்? என்றையதினத்தில் எந்தநேரத்தில் கொடுத்தாய்? அப்போது என் கிட்டவிருந்ததுயார்? ஒருவேளை நான் மறந்திருப்பேன், சொல்—நினைத்துப் பார்க்கிறேன்" என்றான். அதற்கு அக் கல்விமான் தான் பணங்கொடுத்த தேதியும் இந்நேரத்தில் இந்த இடத்தில் கொடுத்தேனென்றும் சில அடையாளங்களோடு சொன்னான். அதைக்கேட்டு வர்த்தகன் ஓ! ஓ! இப்பொழுதுதான் அது ஞாபகத்துக்கு வந்தது. அப்படியா! நான் மறந்து உன்னைப் பலபடி பேசினேன். இந்தா உன் ரூபாவென்று ரூபா ஆயிரத்தையுங் கொடுத்துத் தான்செய்த பிழைக்குக் கல்விமானை மன்னிப்புக்கேட்டுக்கொண்டான். யாதொரு விசாரணையுமின்றித் தந்திரத்தால் உண்மையை வெளிப்படுத்திய இவரல்லவோ நியாயாதிபதி யாவார்.

## ஹாஸ்யம்—

ஒருவன் தன்தலைமேல் கொள்ளு மூட்டையை வைத்துக்கொண்டு ஒரு குதிரையின் மேல் சவாரி செய்துகொண்டு போனான். அவனைக் கண்ட வழிப்போக்கர்கள், "இதுஎன்ன பாவம்! குதிரை சூலாயிருப்பது தெரியவில்லையா? உன்னையும் கொள்ளுமூட்டையையும் இது எப்படிச் சுமந்துகொண்டு போகும்;" என்று கேட்டார்கள். குதிரைக்காரன், "உங்களுக்குத் தெரியவில்லையா? மூட்டையை நானெங்கே குதிரையின்மீது வைத்திருக்கிறேன்? என் தலையின் மேலல்லவா வைத்துக்கொண் டிருக்கிறேன். நானப்படிச் செய்வேனா; வாயில்லாப் பிராணியல்லவா? இன்றைக்கு நேற்று குதிரை சவாரிசெய்கிறேன்." என்றானாம்.

## சற்புத்திரன்

கண்ணபுரத்தில் ஒரு வேளாளர். அவர் நல்ல கலைக்ஞானி; பேர் மூர்த்தி முதலி; தரும சிந்தையுள்ள மேதாவி; புகழுடன் தோன்றிய புண்ணியசாலி; அவருடைய பத்தினியோ மேலான குணசீலி. மனங்கோணாமல் நடக்கும் மகாலக்ஷ்மி; தருமாம்பிகையென்னும் பேருடைய உத்தமி. இவர்கள் பிதிரார்ச்சித சொத்துடையவர்கள்; சுக ஜீவனத்தை மேற்கொண்டவர்கள்; தான தரும பரிபாலிகள்; உலகங் கொண்டாட உதித்தவர்கள்; தம்மை நெருங்கியவர்க்கு இதோபதேசம் செய்யவல்லவர்கள்.

இவர்களுக்கு நெடுநாள் சந்தானவிர்த்தி யில்லாதிருந்தது. கடவுளுடைய கிருபையால் கடைசிக்காலத்தில் ஒருபுத்திரன் பிறந்தான். அப்புத்திரனுக்குப் பத்து வயதாகுமுன்பே அவன் தகப்பனார் பரலோகஞ் சென்றுவிட்டார். விதவையான தாயே அப்பிள்ளையைப் பாதுகாத்து வரவேண்டியதாயிற்று. பிள்ளை பிறந்தகாலத்தில் மூர்த்திமுதலியின் பிதிரார்ச்சித சொத்து முழுதுங் கரைந்துபோயிற்று. அதனால் தாயானவள் கஷ்டப்பட நேர்ந்தது. 'பிள்ளையைக் கரையேற்றுவது எப்படி' என்கிற கவலை அவளை அல்லும்பகலும் அறுபது நாழிகையும் வருத்தி வந்தது. பொருள் வருவாய் பூச்சியமானவர் புத்திரனைப் * பூச்சியமாக்குவது (புகழுடையச்செய்வது)

அசாத்தியமல்லவா? ஆனாலும் பெற்றமனம் பித்தாகையால், அவனுக்கு வித்தையை இனாமாகக் கற்பிக்கத்தக்க இரக்கமுள்ள வித்தியாகுரு எவரேனுங் கிடைப்பரோ என்று அவள் தேடிவந்தாள். செல்வப் பொருளினும் கல்விப்பொருளேசிறந்ததென்று அவள் நன்றாயறிவாள். முயற்சி திருவினையாக்கும் என்றபடி தெய்வாதீனமாய் அவளுக்கு ஓர் உபாத்தியாயர் கிடைத்தார். அவர் அடுத்த கிராமத்தில் தெருப்பள்ளிக்கூடம் வைத்துக் கொண்டிருந்தார். அவரிடம் போய்த் தன் குறைகளை அவர் மனமிரங்கும்படி யுரைத்து, "என் புத்திரனுக்கு இரண்டெழுத்து வரச்செய்தால் உமக்குப் பெரிய புண்ணிய முண்டு" 'இல்லோரிரப்பது மியல்பேயியல்பே.'" என்று வேண்டிக்கொண்டாள்.

பையன் அறிவறிந்த பிள்ளை என்பதை, வாத்தியார், அவன் முகக் குறிப்பால் தெரிந்துகொண்டார். "இப்படிப்பட்ட சற்புத்திரரைப் பெறுவது மகாதுர்லபம். அப்புத்திரரைப் பெற்றவர்களே பாக்கியசாலிகள்.

'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற'

(ஒருவர் பெறத்தக்க பாக்கியவிசேஷங்களுள் புத்திசாலியான புத்திரபாக்கியத்தைப் பெறுவதே சிரேஷ்டம். அதனினும் மேலானதொன்றுண்டென்பதை நாம் மதிப்பதில்லை.)

ஆகையால் இந்த மூதாட்டியே கொடுத்து வைத்தாள். 'அன்றிட்டார்க்கு, இன்று வெறும்பானை பொங்குமோ மேல்' என்பது தருமநீதியல்லவா? இப்பிள்ளையை நாம் கவனிக்கவேண்டியது, 'இரந்தோர்க்கீவதும் உடை



யோர் கடனே' என்னும் உறுதியை யுணர்ந்த நமக்கடுத்ததே" என்றெண்ணி அப்பிள்ளையைத் தம்மிடம் படித்து வரக் கட்டளையிட்டார்.

பிள்ளையின் பெயர் முத்துராமன். முத்துராமன் தினந்தோறும் தன் கிராமத்தைவிட்டுக் காட்டுவழியாய்ச் சிறிது தூரம் நடந்து பள்ளிக்கூடமுள்ள கிராமத்துக்குப் போகவேண்டும். அவனுக்கு வழித்துணையொருவருங் கிடையாது. பள்ளியில் வாசிக்கும் பிள்ளைகளெல்லாம் பணக்காரர்கள். அவர்கள் வண்டிகளிலும் வேலையாள்களுடனும் பள்ளிக்கு வருவார்கள். இப்படி இவர்கள் சிறப்பாய்வருவதை நெடுநாள்கவனித்து வந்த முத்துராமன், ஒருநாள் தன் தாயாரைநோக்கி "அம்மா! எல்லாப் பிள்ளைகளும் விலையுயர்ந்த உடுப்புகளையணிந்துகொண்டு வேலையாள்களோடு பள்ளிக்கூடம் வருகிறார்கள். போகும்போது அந்த வேலைக்காரர்கள் வந்து அவர்களை அழைத்துக்கொண்டு போகிறார்கள். நாம் ஏழையாயிருப்பதால் அவர்களைப்போல் நடந்துகொள்ள நம்மால் முடியவில்லை. அதைப்பற்றி நான் வருத்தப்படவில்லை. வழிதான் தூரம். அதுவும் காட்டுவழி. மனிதசஞ்சாரமற்றது. ஒரு துணைமாத்திரம் எனக்கிருந்தால் போதும். கவலையின்றி அவனோடு பேசிக்கொண்டே பள்ளிக்கூடம் போவேன். வரும்போதும் அவன்வந்து என்னை இட்டுக்கொண்டு வரலாம். இதற்காக ஒருவனைத் தேடிப் பிடித்தால் நல்லதென்று நினைக்கிறேன். நீ கொஞ்சம் பிரயாசைப்படவேண்டும்" என்று தன் தாயாரைச் சில நாள் தொந்தரவு செய்துவந்தான்.

தாயார் அவனை நோக்கி "அப்பா! நீயோ அறி

வறிந்த பிள்ளை. உனக்கு நானொன்றும் அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. நம்முடைய நிலைமை யுனக்கு நன்றாய்த் தெரியும். நாம் பிச்சையெடுத்து ஜீவிக்கிறோம். அந்தப்பிச்சையும் சிலசமயங்களில் உன் வயிற்றுக்கே போதாதபடி அகப்படுகிறது. நமக்கு யார் துணைவரப் போகிறார்கள்? துணை வேண்டுமென்று நாம் ஒருவரைக் கேட்பதற்கு நம்மிடத்தில் யோக்கியதை யில்லை. கேட்டாலும் பரிகசிப்பார்கள். "இல்லாரை எல்லாரும் எள்ளுவர்" (தரித்திரரையாவரும் நிந்திப்பார்கள்) என்று நீ படித்திருக்கிறாயே. நல்லகாலம் வருமட்டும் கஷ்டத்தைச் சகித்து வரவேண்டும்" என்று போதித்து வருவாள். இப்போதனைக்குட்பட்டுக் கொஞ்ச நாள் முத்துராமன் பொறுமையா யிருந்தான். மறுபடியும் துணை அவசியம் வேண்டியது என்று தன் தாயாரை நிர்ப்பந்தித்தான்.

தாயார் அவனைச் சமாதானப் படுத்த "அப்பா! நான் ஓர் ஆளை உனக்குத் தேடிப்பிடிப்பதிலும், நீயே தேடிக்கொள்ளலாம். நீ எல்லாருக்கும் நல்லவன். உன் பேச்சை ஒருவரும் தட்டமாட்டார்கள். உனக்குத் தெய்வபல முண்டு—நீ போகும் காட்டு வழியில் ஓரிடைப்பையனிருக்கிறான். அவனைத் துணையாகக்கொள்" என்று சொன்னாள். இந்த வார்த்தைகள் முத்துராமனுக்குப் பெருமகிழ்ச்சியைத் தந்தது. அவன் உடனே தன் தாயாரை நமஸ்கரித்து "அம்மா! இதை எனக்கு முன்னமேயே சொல்லலாகாதா? நான் உன்பேச்சை நம்பாதவனா? "தாய்சொற்றுறந்தால் வாசகமில்லை." யல்லவா? சரி—இனியுன்னைத் தொந்தரவு செய்யமாட்டேன்." என்று விநயமாய் மொழிந்தான்.



மறுநாள் முத்துராமன் காட்டுவழியே பள்ளிக்குப் போகும்போது அங்கு நின்று நாலாபக்கமும் பார்த்தான். ஒருவருந் தென்படவில்லை. "இங்கு இடைப் பையன் இருப்பதாக நமது தாயார் தெரிவித்தாள். அவன் எப்பக்கத்தி லிருக்கின்றானோ? நல்லது கூப்பிட்டுப்பார்போம்" என்று தனக்குள் நினைத்து "இடைப் பையா-இடைப்பையா-நீ எங்கடா இருக்கிறாய்? எனக்குத் துணை வேண்டுமென்று என் தாயாரைக்கேட்டபோது அவள் உன்னிடம் போகச்சொன்னாள்? சீக்கிரம் வா அப்பா-நேரமாகிறது" என்று உரத்த சத்தம் போட்டுக் கூப்பிட்டான்.

பையனுடைய பரிசுத்த உள்ளத்துக் குகந்த பகவான் உடனே ஓரிடைப்பையனாக ஓடி வந்து முத்துராமனைத் தழுவிக்கொண்டு "ஏனடா என்னைக் கூப்பிட்டாய்?" என்றார். முத்துராமன் பகவானைப்பார்த்து "அடே நீ இங்கிருப்பது எனக்கு இத்தனைநாளாகத் தெரியாமற் போயிற்று. தனியாகவே நான் பள்ளிக்கு இந்தவழியே நடந்து போவதும் வருவதுமாயிருந்தேன். நீ தான் இனி எனக்குத் துணையா யிருக்க வேண்டும். வா பள்ளிக்கூடத்திற்குப் போவோம்" என்றான். பகவான் அப்படியே அவனை அன்றுமுதல் அந்த வழியிலிருந்து பாடசாலைக்கு அழைத்துக் கொண்டுபோய் விடுவதும், மாலைப்போதில் வீட்டுக் கழைத்துக்கொண்டு வந்து விடுவதுமா யிருந்தார்.

ஒரு நாள் வாத்தியார் வீட்டில் சுபகாரிய மொன்று நடப்பதாயிருந்தது. அப்போது பிள்ளைகளெல்லோரும் வாத்தியாருக்கு மரியாதை செய்யப் பொன் வெள்

ளிப் பாத்திரங்களும், பட்டுகளும், சரிகைவேஷ்டிகளும், தங்கள் தங்கள் அந்தஸ்துக்குத் தக்கபடி வைக்க வேண்டுமென்று பேசிக்கொண்டார்கள். முத்துராமன் இப்பேச்சைக் கேட்டதும் முகவாட்டமடைந்தான். தானொன்றும் செய்வதற்கில்லையே என்று துக்கிக்கலானான். அன்று அவன் வீட்டுக்குப் போனதும் தாயாரிடம் இதைத் தெரிவித்து "அம்மா! எல்லாப்பிள்ளைகளும் மரியாதை செய்யும்போது, நான் மாத்திரம் சும்மா இருந்தால், அது நல்லதா? நமது கையில் கிடைத்தது ஏதேனும் கொடுத்தால்தானே அழகாயிருக்கும். ஏதாவது பாரம்மா" என்று கெஞ்சிக் கேட்டான். அவள் அவனை நோக்கி "அப்பா! நீ அடிக்கடி இப்படி ஒன்றுந் தெரியாதவனைப்போல என்னைத் தொந்தரவு செய்கிறாய். நானென்ன செய்வேன். வயிற்றுப்பாட்டைக் கழித்துக்கொண்டு வருவதே திண்டாட்டமாயிருக்கிறது. நீயோ பிடிவாதஞ் செய்கிறாய். நல்லது—நான் முன் சொன்ன இடைப்பையனையே கேள். அவன் ஏதாவது கொடுப்பான்" என்றாள்.

"இப்படி முதலிலேயே சொல்லிவிடக் கூடாதா? அவனையே கேட்கிறேன். அவன் நல்லவன். என்னோடு சந்தோஷமாய் விளையாடுகிறான்." என்று சொல்லி, பள்ளிக்குப் போகையில் அவனைக்கண்டு "அடே! அடே! இப்போது உன்னை நான் ஒன்று கேட்கப் போகிறேன். நீ இல்லை யெனக் கூடாது. எங்கள் வாத்தியார் வீட்டில் சுபகாரியம் நடக்கப்போகிறது. பிள்ளைகளெல்லாம் டம்பம் பேசிக்கொள்ளுகிறார்கள். நானும் ஒரு பிள்ளைதானே. நான் மாத்திரம் சும்மா இருக்கலாமா? அதற்



காக என் தாயாரைக் கேட்டால், அவள் உன்னிடமே போகச்சொல்லுகிறாள்—அவள் சொற்படி வந்தேன். நீ ஏதாவது உதவிசெய்துதான் தீரவேண்டும்" என்றான்.

பகவான் "என்னிடம் என்ன இருக்கிறது. இதோ சின்ன மண்செப்பிலிருக்கும் பாலை எடுத்துக் கொண்டுபோ?" என்றான், பையன் சந்தோஷமாய் "போதும்—போதும்—வெறுங்கைக்கு இது பெருங்கையல்லவா?" என்று அதைப் பெற்றுக்கொண்டு வாத்தியார் வீடு நோக்கிச் சென்றான்.

வாத்தியார் வீட்டில் அலங்காரமும் வாத்திய கோஷமும் பலம். விநோதம் விநோதமாக வரிசைகள் பொன் தட்டிலும் வெள்ளித் தட்டிலும் வந்து நிறைந்து கொண்டே யிருந்தன. முத்துராமன் தனக்குப் பகவான் கொடுத்த மண்பாத்திரத்திலுள்ள பாலைக் கையில் வைத்துக்கொண்டு "இதை எப்படி வாத்தியாரிடம் கொடுப்பது" என்று யோசித்துக் கொண்டிருந்தான். "என்னடா உன்கையில்" என்று வாத்தியாராவது மற்ற பிள்ளைகளாவது கேட்கவில்லை. அவன் முகத்தை ஏறெடுத்துப் பார்க்கவுமில்லை. வெகு நேரம் காத்திருந்து பிறகு, அவன் வாத்தியாரே! வாத்தியாரே என்று கூப்பிட்டான். அதையும் ஒருவரும் கவனிக்கவில்லை. பையன் துணிந்து அதைத் தானே வாத்தியார் கையில் கொடுத்தான். வாத்தியார் "என்னடா இது--பலேவரிசை கொண்டுவந்து விட்டாய்"—என்று சொல்லி "அதை ஒரு வெள்ளிப் பாத்திரத்தில் ஊற்றிக்கொண்டு, மண் செப்பை அவனிடம் கொடுத்துவிடு" என்று ஒரு பிள்ளைக்கு உத்தரவிட்டார். உத்தரவின்படி ஒரு பையன்

பாலை வாங்கி ஒரு பாத்திரத்தில் விட, அப்பாத்திரம் நிறைந்து விட்டது. ஆனால் பால் கொண்டுவந்த பாத்திரமட்டும் காலியாகவில்லை. பால் அதில் இருந்தபடியே இருந்தது. பிள்ளைகள் வாத்தியார் வீட்டிலுள்ள சின்னதும் பெரிதுமான பாத்திரங்கள் எல்லாவற்றிலும் அந்தப் பாலை ஊற்றிக்கொண்டு வர, அப்பாத்திரங்கள் நிறைந்து போயினவே யொழிய மண் பாத்திரமட்டும் முன்போலவே பாலோடு இருந்தது. இந்த ஆச்சரியத்தை வாத்தியார் கண்டு பயந்து முத்துராமனைத் தனியே அழைத்து நடந்த வர்த்தமானங்களைத் தெரிந்துகொண்டு பால் கொடுத்த இடையன் பரமாத்துவே என்று துணிந்து அவரைக் காட்டும்படி முத்தை வேண்டினார்.

ஆனால் முத்துக்கு வழக்கப்படி தரிசனந்தந்த பகவான், அவனோடு வாத்தியார் இருப்பதறிந்து தரிசனம் தரவில்லை—பையன் எவ்வளவோ பாடுப்பட்டுப் பார்த்தான். தரிசனங் கிடைக்கவில்லை. ஆகாயத்தில் ஓரசரீரி உண்டாயிற்று. அது "அடே முத்து உன் மனம் களங்கமற்றதானபடியால் உனக்கு நான் காட்சி கொடுத்தேன். உன் வாத்தியாருக்கு இன்னும் மனம் சரியான நிலைக்கு வரவில்லை அடுத்த ஜன்மத்தில் அவருக்குக் காட்சி தருவேன்" என்று கூறிற்று. அனைவரும் கேட்டு அதியாச்சரியமுற்று முத்துராமனைப் புகழ்ந்து போற்றினார்கள். நாமும் அவனைப்போல் சுத்தமான உள்ளத்தைப் பெறவேண்டுமென்று முயற்சி செய்யலானார்கள். "அகத்தழகு முகத்தில் என்பது இப்போது தெரிந்தது" என்று பேசிக்கொண்டார்கள். முத்துராமனைப்போல் நடந்துவரத் தீர்மானித்துக் கொண்டார்கள். சற்புத்திரரே மேன்மை பெறுவர்.



முத்துராமன் தாயோடு பிரபலமாய் வாழ்ந்து பகவானை உள்ளபடி அறிந்து வணங்கி உன்னத நிலையை அடைந்தான். அவனால் அநேகர் நல்வழிக்கு ஆளானார்கள்.

சற்புத்திரன் ஒருவன் உண்டானால் அவனால் உலகமே மேம்பாடடையும் என்று முத்துராமன் கதையால் நாம் தெரிந்துகொண்டோம்—நாமும் அவனைப் போல் நடப்போமாக.

## சித்திரமெழுதுவோன் வைத்தியனான விநோதம்

ஜபபுரியென்னும் ஊரில் சித்திரக்காரன் ஒருவனிருந்தான். அவன் சித்திரமெழுதுவதில் புகழ்பெற்றவன். ஆயினும் அவன் தான் எழுதும் சித்திரத்தில் திருப்தியடையாமலே இருந்தான். ஏனெனில், எழுதும் சித்திரம் வெகு காலம் வரையில் எல்லோருடைய பார்வையிலும் படத்தக்க தல்லவா? பார்ப்பவர்களில் யார் எந்தக்குறையைச் சொல்லி நம்மை இழிவுபடுத்துவார்களோ வென்கிற சஞ்சலம் மிகுதியும் அவனைப் பாதித்தது. அவன் அதனால் இந்தத்தொழிலை விட்டு வேறு தொழிலில் ஜீவனஞ் செய்ய எண்ணிப் பலநாள் ஆலோசித்தும் ஒன்றுந் தோன்றாமையினால் சில நாள் சும்மா விருந்தான். இதனால் அவன் அந்தோ! இப்படிச்

சோம்பேறியாகக் காலந்தள்ளுவது கூடாதே! 'சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்' என்னும் பெரியோர் வாக்குப்படி 'சங்கடம் நேரிடுமே! சை! சோம்பல் கொடிது! முயற்சி இனிது! ஆதலின் எதிலேனும் பாடுபட்டு உழைப்போம். அது மனத்துக்கு நிம்மதி தரும்படியாயிருந்தாற் போதும். அதற்கு இது ஊரல்ல! அயலூரே சரியானது.' நிலைகெட்டவன் சொந்த ஊரிலிருந்தாற் பெருமையுண்டாகாது" என்று கருதி, அந்த ஊரைவிட்டு வேறோர் ஊருக்குப் போய் விட்டான்.

அப்பால் சிலமாதங் கடந்தபின், அவனுடைய நண்பனொருவன் அவனை அந்த ஊரில் கண்டான். சித்திரக்காரன் கையில் வைத்தியப் பையுட னிருந்தான். அவன் ஆச்சர்யப்பட்டு "இதென்ன கோலம்! என் வைத்தியரானீர்? உமது தொழில் உமக்குச் சோறு போடவில்லையா? ஏன் அதை விட்டு இத்தொழிலையேற்றுக்கொண்டீர்!" என்று கேட்டான்.

சித்திரக்காரன், "அப்படிக்கேள்! உன்னோடு சொல்லாமல் யாரோடு சொல்லப் போகின்றேன். நீ உற்ற தோழனல்லவா? உனக்கு மறைக்கலாமா?" என்று கூறி—"நண்பா! சித்திரம் எழுதினால் அது நெடுங்காலத்திற்கிருந்து பார்ப்பவர்களுக்குக் குணதோஷங்களை விளக்குகிறது. அதனால் என் மனம் அதில் வெறுப்படைந்தது. பிறகு வெகுதூரம் யோசித்து இந்தத் தொழிலை மேற்கொண்டேன்." என்று சொல்லி மேலே [illegible]ப்பான், "இந்தத் தொழிலில் நீ [illegible] இதில் மாத்திரம்

18644